**நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி, இலங்கை**

**உணவு நன்கொடை**

நவீல்ட் பாடசாலையானது செவிப்புலன் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டு 61 ஆண்டுகளாக இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது இப்பாடசாலையில் 127 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அம் மாணவர்களுக்கு தேவையான உணவு, தங்குமிட வசதி, சுகாதார வசதி மற்றும் பொழுதுபோக்கு வசதி என்பவற்றை இலவசமாக வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

எமது கவனிப்பின் கீழுள்ள விசேட தேவையினை சார்ந்து வாழும் நிலையினருக்குச் சமூகத்தில் சுயமாகத் தம்மை நிலைப்படுத்தி வெற்றிகரமாக சமூகப் பங்களிப்பை வழங்குவதற்கேற்ற பொருத்தமான தொழில்நுட்ப, முறைமைகள் மூலமான கல்வி மற்றும் ஏனைய வசதி வாய்ப்புக்களை அளிக்கத்தக்கவாறு தரமான பயிற்சியளிக்கப்பட்ட மனிதவளத்தைப் பயன்படுத்தி நிபுணத்துவத்தோடு முகாமைமிக்க சேவையை வழங்குவதே இப்பாடசாலையின் இலக்காகும். எல்லா உயிர்களுக்கும் உணவு என்பது மிகவும் இன்றியமையாதது ஒன்றாகும். அதனால்தான் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதலாவது தேவையாக உணவு இடம் பெறுகிறது. அதுமட்டுமின்றி மனிதன் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கு உணவே முக்கிய காரணமாக அமைகின்றது. ஆகவே நிறைவான உணவை செவிப்புலன் விழிப்புலன் இழந்த மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவது இப்பாடசாலையின் பிரதான நோக்கங்களில் ஒன்றாக காணப்படுகிறது.

இக்கோரிக்கையானது இப்பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு உணவு வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கையில் ஒரு சிறிதளவேனும் மகிழ்ச்சியை ஏற்படுத்தவேயாகும். உங்கள் குழந்தைகளின் பிறந்தநாளையோ, அல்லது உங்கள் உறவினரின் நினைவு தினத்தையோ நீங்களும் இம்மாணவர்களுடன் கொண்டாடுவதற்கு இதைவிட வேறு சந்தர்ப்பம் உண்டோ?

**உணவு வழங்குவதற்கு கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்க.**

**உணவுத்திட்ட இணைப்பாளர்**

**நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை**

**கைதடி, இலங்கை.**

**தொ.பே இல** : 0212232202, 076-2566684, 077-2527256

**WhatsApp/ Viber** :- 077-2527256

**மின்னஞ்சல்** : nsdb1956@gmail.com

இப்பாடசாலை சமுதாய பணிக்காக மட்டும் நிதிதிரட்டும் நிறுவனம் (Charity Reg.No:10411 of 06-06-1952) என்பதால் தங்கள் பங்களிப்பிற்கு வரி நீக்கம் செய்யப்படும். தாங்கள் விரும்பிய பங்களிப்பினை நேரடியாக பாடசாலைக்கு கொடுக்கலாம் அல்லது பாடசாலை வங்கிக்கணக்கில் வைப்பிலிடலாம். நன்கொடைப்பணமானது வங்கியில் செலுத்தப் பட்டால், செலுத்தியவரின் பெயர், முகவரி என்பவற்றைப் பாடசாலைக்கு அறியத்தரல் வேண்டும். சகல நன்கொடைகளுக்கும் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

**வங்கிக்கணக்கின் விபரம் பின்வருமாறு:**

| | | |
|---|---|---|
| **வங்கியின் பெயர்** | : | **கொமர்ஷல் வங்கி, யாழ்ப்பாணம்** |
| **கிளை** | : | **பிரதான கிளை** |
| **முகவரி** | : | **வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்** |
| **கணக்கின் பெயர்** | : | **Nuffield School CCFC** |
| **கணக்கு இல** | : | 1060013478 |
| **SWIFT குறியீடு** | : | **CCEYLKLX** |

**குறிப்பு**

உங்களுக்கு விரும்பிய உணவை நீங்கள் தெரிவு செய்து உங்களுக்கு விருப்பமான நாட்களில் வழங்கலாம்.

**இவ்விலைப்பட்டியல் நடைமுறை விலைமாற்றத்திற்கேற்ப மாற்றப்படும்.**

நன்கொடையாளரின் பெயர்: ………………………………………… மின்னஞ்சல் முகவரி : ……………………………………………..

உணவளிக்கும் திகதி : ………………………………………….. விலாசம் : …………………………………………....

தொலைபேசி இல : ………………………………………… சிறப்பு நிகழ்வு :… …………………………

## உணவுகளின் செலவு விபரங்கள்

**காலை உணவு**

| | | |
|---|---|---|
| திங்கள் | இலைக்கஞ்சி/ அவல் | 3,000 |
| செவ்வாய் | சோறு, சம்பல்,பருப்பு கறி | 4,500 |
| புதன் | கடலை | 4,500 |
| வியாழன் | பாற்சோறு, சம்பல், பருப்பு கறி | 5,000 |
| வெள்ளி | அவல் | 4,000 |
| சனி | பாற்சோறு, சம்பல்,வாழைப்பழம் | 5,000 |
| ஞாயிறு | பிட்டு, உருளைக்கிழங்கு கறி, முட்டைப்பொறியல் | 8,000 |

**மதிய உணவு**

| | | |
|---|---|---|
| திங்கள் | சோறு, 3 மரக்கறி , முட்டை | 16,500 |
| செவ்வாய் | சோறு, 3 மரக்கறி , இறைச்சி/ கடலுணவு | 27,000 |
| புதன் | சோறு, 3 மரக்கறி , கருவாடு/முட்டை | 16,500 |
| வியாழன் | சோறு, 3 மரக்கறி , மீன் | 23,000 |
| வெள்ளி | சோறு, 4 மரக்கறி, வாழைப்பழம், அப்பளம், மிளகாய் | 15,000 |
| சனி | சோறு, 3 மரக்கறி , மீன் | 23,000 |
| ஞாயிறு | சோறு, 3 மரக்கறி , இறைச்சி /கடலுணவு | 27,000 |
| **விசேட உணவு** | **மரக்கறி பிறைட்றைஸ்** - சம்பாசோறு, 4 மரக்கறி, வாழைப்பழம், அப்பளம், மிளகாய் | 20,000 |
| | **இறைச்சி பிறைட்றைஸ்** - சம்பாசோறு, 3 மரக்கறி, இறைச்சி | 44,000 |

**இரவு உணவு**

| | | |
|---|---|---|
| திங்கள் | பிட்டு, கருவாடு, சம்பல் | 8,000 |
| செவ்வாய் | றவை உப்புமா, கடலைக் கறி | 5,500 |
| புதன் | சம்பாச்சோறு, கோவா, கருவாட்டுக்கறி | 8,500 |
| வியாழன் | இடியப்பம், சோயா கறி, சாம்பாறு | 7,500 |
| வெள்ளி | பாண், சாம்பார், சம்பல் | 7,500 |
| சனி | பிட்டு, சோயா, வறை, பால் சொதி | 5,500 |
| ஞாயிறு | சம்பாச்சோறு, சாம்பாறு, சம்பல் | 5,000 |
| **விசேட உணவு** | இட்லி, சாம்பார் | 8,000 |
| | நுடில்ஸ், இறைச்சிக் கறி | 14,500 |
| | நூடில்ஸ்/ உப்புமா, மீன் கறி | 11,000 |

**சிற்றுண்டி வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| உழுந்து வடை | 10,000 | பாயாசம் | 2,500 |
| கடலை வடை | 7,000 | கடலைத் துவையல் | 2,250 |
| கட்லட் | 8,000 | மோதகம் | 4,000 |
| பால் தேநீர் | 2,500 | சத்துமா | 4,000 |
| மைலோபால் தேநீர் | 3,000 | கேக் | 12,000 |
| யோகட் | 6,500 | ஐஸ்கிறீம் | 7,000 |
| சான்ட்விச் | 5,500 | தேநீர் | 1,800 |
| பழச்சாறு | 8,000 | | |
| வாழைப்பழம் | 2,000 | | |